**செ. கு. எண்: 33** **நாள்: 27.02.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – நாள் 27.2.2019

---

ஆதிதிராவிடர் இனப் பிரிவுகளில் உள்ள குடும்பன், பண்ணாடி, காலாடி, கடையன், தேவேந்திரகுலத்தான், பள்ளன் ஆகிய ஆறு பிரிவுகளையும் ஒன்றாக இணைத்து தேவேந்திரகுல வேளாளர் எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

இந்த கோரிக்கை குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் சட்டத் துறையின் செயலாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், ஆதிதிராவிடர் நல இயக்குநரை உறுப்பினர்–செயலராகவும் கொண்ட ஒரு குழுவை அமைத்து மாண்புமிகு அம்மாவின் அரசு இன்று உத்தரவிட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும், மாண்புமிகு அம்மாவின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**